செ.வெ.எண்: 308

## பத்திரிக்கை செய்தி

## தொழிலாளர் துறை 15.6.09

நுகர்வோர் பாதுகாப்பில் தமிழக அரசு மிகுந்த அக்கறை கொண்டு, நுகர்வோர் நலன் காக்கும் பல்வேறு சட்டங்களை திறம்பட அமுல்படுத்தி வருகிறது. நுகர்வோர் பாதுகாப்பில் மிகவும் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ள தரப்படுத்தப்பட்டுள்ள எடையளவுகள் சட்டத்தை தொழிலாளர் துறை அமுல்படுத்தி வருகிறது. இச்சட்டத்தின் கீழ் வணிகர்கள் தரப்படுத்தப்படாத, மறுமுத்திரையிடப்படாத எடைகள் மற்றும் அளவைகளை தொழில் அல்லது வியாபாரத்தில் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பயன்படுத்தினால் அவைகள் பறிமுதல் செய்யப்பட்டு, வணிகர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வணிகர்கள் பயன்படுத்தும் ஒவ்வொரு எடைக்கற்களும் , எடையிடும்/அளவிடும் கருவிகளும் துல்லியமாக இருந்தால்தான் நுகர்வோர் பாதிப்படையாமல் இருப்பர். அன்றாடம் வணிக நிறுவனங்களில் பயன்படுத்தும் எடையளவுகள் தவிர பெட்ரோல் பம்ப்புகள், லாரிகள் நிறுக்கும் எடைபாலங்கள் , எரிவாயு கலன்கள் உள்ளிட்ட அனைத்து எடையளவுகளும் இத்துறை ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்படுகிறது.

மேற்படி எடைகருவிகள், எடைபாலங்கள் துல்லியமாக இருக்கிறதா என்பதை பரிசோதிக்கும் பொருட்டு, மத்திய அரசு மின்னணு தராசுகள் , எடைபாலங்களை பரிசோதிக்கும் நடமாடும் ஊர்திகள் உள்ளிட்ட பல்வேறு சாதனங்களை மாநில அரசுகளுக்கு வழங்கி வருகிறது. எடைபாலங்களை பரிசோதிக்க இரண்டு, தலா ரூபாய் 53 இலட்சம் மதிப்புள்ள மின்தூக்கியுடன் இணைந்த நடமாடும் ஊர்திகளை (Mobile Testing Kit) தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு சமீபத்தில் அளித்துள்ளது. இந்த ஊர்தியின் மூலம் 12 டன் எடையுள்ள எடைக்கற்களை எடுத்துச்சென்று வெவ்வேறு இடங்களில் உள்ள எடைபாலங்களை எளிதாகவும் மிக துல்லியமாகவும் பரிசோதிக்க இயலும். இதனால் அதிக எண்ணிக்கையிலான எடைபாலங்கள் ஆய்வு செய்யப்படுவதற்கும் கால விரயம் தவிர்ப்பதற்கும் வழிசெய்யப்படும். இது தமிழகத்தில் எடையளவு பிரிவை நவீனப்படுத்தி நுகர்வோர் நலன் பாதுகாப்பை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாகும்.

இந்த இரண்டு நடமாடும் ஊர்திகளும் திருவள்ளூர் மற்றும் கோவை மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும் அருகாமையில் உள்ள மாவட்டங்களுக்கும் இந்த ஊர்தி எடுத்துச் செல்லப்பட்டு எடைபாலங்களை பரிசோதிக்க பயன்படுத்தப்படும். நடப்பு ஐந்தாண்டு திட்ட காலத்திற்கும் மேலும் இத்தகைய இரண்டு எடைபாலங்களை பரிசோதிக்கும் நடமாடும் ஊர்திகளை தமிழகத்திற்கு வழங்குவதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இந்த இரண்டு நடமாடும் ஊர்திகளையும் பயன்பாட்டில் விடுவதற்கு ஏதுவாக மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா. மோ. அன்பரசன் அவர்கள் இன்று சென்னை தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் இந்த வாகன இயக்கத்தை கொடியசைத்து துவக்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசு முதன்மைச் செயலர் டாக்டர். பிரபாகர ராவ், இ.ஆ.ப., தொழிலாளர் ஆணையர் திரு. அ. சுகுமாரன், இ.ஆ.ப., சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அலுவலர் திரு. மு. இரவிச்சந்திரன் மற்றும் தொழிலாளர் துறை ஆய்வர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தொழிலாளர் ஆணையருக்காக

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9